பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

90 ஒளியியல்
சனி, ஞாயிறு- 9-10
சௌந்தி
89 பௌதிக இரசாயனம்
பிரிவு II 4.15-15.5
செல்வா
90 பொது இரசாயனம்
சனி, ஞாயிறு 8-9
NIRU TUITION
CENTRE,
Kondavil.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2.

A/L 90
SAT, SUN
மரியதாஸ் 3-4
சினனத்தம்பி 4-5
தேவா 5 6
Niru Tuition
CENTRE,
KONDAVIL.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 02 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1049 ற.அவ்வல் பிறை 06 (18 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 212

## உடற்பாதிப்புக்கு உள்ளான
# மேலும் 8 விடுதலைப்புலிகள்
# நேற்று விடுவிக்கப்பட்டனர்

### தமிழகத்திலிருந்து கூட்டிவரப்பட்டு திருமலையில் தடுத்துவைக்கப்பட்டோர்

— எம். பேரின்பநாயகம், ஆர், அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், அக்டோபர் 18

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குக் கூட்டி வரப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 157 பேரில் மேலும் எட்டுப் பேர் நேற்று நண்பகல் யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இந்திய அமைதிகாக்கும் படையின் யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன், யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையிலும், வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு உறுப்பினர்கள் முன்னிலையிலும் இந்த எட்டுப் பேரையும் விடுவித்தார்.

நேற்று விடுவிக்கப்பட்ட எட்டுப் பேரும் ஏதோ ஒரு வகையில் உடற்பாதிப்புக்கு உள்ளானவர்கள். இவர்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து கூட்டி வரப்பட்டு திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த எட்டுப்பேரும் நேற்றுக்காலைதிருகோணமலையில் இருந்து விமானம்மூலம் பலாலிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கிருந்து ஹெலிக்கொப்டர்மூலம்மண்டைதீவுக்கும் பின்னர் மண்டைதீவிலிருந்து அமைதிப் படையினரின் அம்புலன்ஸ் ஜீப் மூலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் நேற்று மூற்பகல் 11-30 மணியளவில் விடுவிக்கப்பட்டதைத்தொடர்ந்து அவர்களுக்குத் தேவையான

[6ஆம் பக்கம் பார்க்க]

### விடுவிக்கப்பட்டோர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், அக்டோபர் 18

யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து நேற்று விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் எட்டுப்பேரும் வைத்திய சிகிச்சைக்காக வடமராட்சியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நேற்றுமாலை சேர்க்கப்பட்டதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-10-9)

### விடுதலையானோர் விவரம்

யாழ்ப்பாணம் அக் 18

திருமலையில் இருந்து கூட்டி வரப்பட்டு நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து விடுதலையானோரின் விவரம் வருமாறு:-

ஜே.மோகன் (வயது15), ஆர். ரவிச்சந்திரன் (வயது21), சடாபி(வயது 19), தர்மன் (வயது24), கே.பகீரதன் (வயது18), கே. இந்திரதாஸ் (வயது 27), எஸ் மணி (வயது 26), நல்லையா (வயது41)

இவர்களில் மணி என்பவர் கடும் சுகயீனமுற்ற நிலையில் ஸ்ரெச்சரில் வைத்தே கொண்டுவரப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-9 10)

### கிறீஸில் பூமியதிர்ச்சி

புதுடில்லி அக் 18

கிறீஸ்நாட்டில் நேற்று நிகழ்ந்த பூமியதிர்ச்சியினால் பெரும்சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 25 பேர் வரை படுகாயமடைந்தனர். (உ)

### முல்லைத்தீவுக்கு 3 புதிய பஸ்கள்

மாங்குளம். அக். 18

முல்லைத்தீவு டிப்போவுக்கு மூன்று புதிய பஸ்கள் வந்துசேர்ந்துள்ளன.

வடபகுதிக்கு ஒதுக்கப்பட்ட பஸ்களில் மூன்றே இங்கே அனுப்பி வைக்கப்பட்டன (வ-94)

### சுபநேரம்

18 - 10 - 1988
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-32முதல் 12-02வரை
ராகுகாலம்;-
03-02முதல் 04-32வரை
அட்டமி நவமி

### ஊர்காவலருக்கு மிரட்டல் கிளர்ச்சியில் ஈடுபடுமாறு!

கொழும்பு, அக் 18

அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஊர்காவல் படையினர் தங்கள் ஆயுதங்களுடன் பங்கேற்க வேண்டும். அல்லது ஊர்காவல் படையினரின் குடும்பத்தவர்கள் கொல்லப்படுவர்.

தென் பிரதேசத்தில் கடமையாற்றி வரும் 6 ஆயிரம் ஊர்காவல் படையினருக்குத் தீவிரவாதிகள் மேற்கூறியவாறு எச்சரித்துள்ளனர்.

இத்தகவலை கொழும்பில் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசு எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெறும் போது பாதுகாப்புப்படையினர் தங்கள் முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். (ஒ-எ)

### கொழும்பு ஆஸ்பத்திரியில்
### வெடிகுண்டு காயங்களுடன் மூன்று இளைஞர்கள் அனுமதி

கொழும்பு, அக். 18

குண்டு வெடித்ததனால் ஏற்பட்டதாகக் கூறப்படும் சிறிய காயங்களுடன் மூன்று தமிழ் இளைஞர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

வெள்ளவத்தையில் உள்ள பீட்டர்ஸன் ஒழுங்கையில் மாடிவீட்டு அறை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வெள்ளவத்தைப் பொலீஸார் புலன்விசாரணை நடத்துகின்றனர்.

### ஒரு மாகாணசபைக்குப் பதில் இரு மாநிலசபை
#### சுதந்திரக் கட்சியின் யோசனை

மாகாண சபை அமைப்பு முறைக்குப் பதிலாக தமிழ் மாநில சபை, முஸ்லிம் மாநில சபை என்ற இரு அமைப்புக்களை நிறுவும் யோசனை சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடத்துக்குஇருந்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்தயோசனைகுறித்து எட்டுக கட்சிக் கூட்டணியில் அங்கம்வகிக்கும்சிறுபான்மை இனக் கட்சிகளின் தலைவர்களிடம் சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் அபிப்பிராயம் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனிடையில், முஸ்லிம்களுக்கு எனத் தனி மாகாணசபை அமைக்கப்படும் என்ற உத்தரவாதம் தரப்பட்டால் மட்டுமே, 8 கட்சிக் கூட்டணியில் சேர்ந்து கொள்ள முடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது. (உ-எ)

### மரணதண்டனை தள்ளிவைப்பு

இந்திரா காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட சத்வன்சிங் உட்பட இரண்டு நபர்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் மரணதண்டனையை நிறைவேற்றுவது தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் இருவருக்கும் கருணைகாட்டும்படி கோரி இந்திய ஜனதிபதியிடம் மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்தே மரணதண்டனை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. (உ)

### குடாநாட்டில் நேற்று பூரண துக்கதினம்

யாழ்ப்பாணம் அக் 18

குடாநாடு எங்கும் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கொக்குவில் கூழாவடிப்பகுதியில் இடம் பெற்ற நேரடி மோதலில் மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் நகரப் பொறுப்பாளர் கப்டன் கரிகாலனுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது

குடாநாடு எங்கும் வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், பொது இடங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

தூர இடங்களில் இருந்து மட்டும் பஸ்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தன. (உ-10-51)

### கிளிநொச்சியில் சகல பாடசாலைகளும் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், அக் 18

கிளிநொச்சிப் பாடசாலைகள் இன்றுமுதல் மீண்டும் வழமைபோல் இயங்கும்.

வவுனியா கிளிநொச்சி மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதனை அறிவித்துள்ளார்.

கல்விப் பணிப்பாளர் எடுத்த முயற்சியை அடுத்து பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

### முல்லைத்தீவில் கடைகள் மூடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் அக் 18

முல்லைத்தீவில் சகல வர்த்தக ஸ்தாபனங்களும்தற்போது தொடர்ந்து மூடப் பட்டிருக்கின்றன.

கடைகளை மூடும்படி இந்திய அமைதிப் படையினர் விடுத்தஉத்தரவை அடுத்தே அவை மூடப்பட்டதாக அங்கிருந்து கிடைத்தசெய்திகள் தெரிவித்தன.

கடந்த வாரம் வவுனியாவில் மரணமடைந்த 12 விடுதலைப் புலிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் முடிவடைந்ததை அடுத்து வர்த்தகர்கள் கடைகளைத் திறக்க முயன்ற போது கடைகளைப் பூட்டும்படி அவர்கள் பணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

எனினும் போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது. (உ-10)

### மட்டக்களப்பில் பாடசாலைகள் திறப்பு

கொழும்பு. அக் 18

மட்டக்களப்பிலுள்ள பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

தென்பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களை அடுத்து நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிவிந்ததே.

எனினும், மட்டக்களப்புப் பகுதியில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சூழ்நிலைகள் இருந்ததால் சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள பாடசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ஐ)

### திருமலையில் 64 விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், அக் 18

இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட 64 விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அமைதிப்படையினரால் திருகோணமலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு தடுத்துவைக்கப்பட்டவர்களில் ஆறு பேர் பெண்கள்.

இவர்கள் அனைவரும் மதுரையில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் நேற்று விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-10)

### தென்பகுதியில் அரச எதிர்ப்பு பேரணிகள்
#### தீவிரவாதிகள் முஸ்தீபு

கொழும்பு. அக் 18

மாத்தறையிலும் ஏனைய தென்பகுதி நகரங்களிலும் அரச எதிர்ப்பு ஊர்வலங்களை இவ்வாரம் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனராம்.

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

மாத்தறையில் பதற்ற நிலை நிலவுவதாக தெரிவித்த இராணுவ வட்டாரங்கள்,

''எவ்விதமான வன்முறைச் சம்பவத்தையும் கட்டுப்படுத்துவதற்குத் தயாரான நிலையில் பாதுகாப்புப் படையினர் இருக்கின்றனர்'' என்று தெரிவித்தன. (ஒ-எ)

### ஜீ.சீ.ஈ. (சாதாரண தரப்) பரீட்சை:
### வினாத்தாள் தயாரிக்க தனிப்பட்ட ஏற்பாடு

கொழும்பு அக் 18

எதிர்வரும் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பத்திரப் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும்போது, தற்சமயம் பாடசாலைகளை இயங்கச்செய்வதில் நிலவும் சீரற்ற நிலைமை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சை ஆணையாளர் திரு ஸ்டேர்லிங்பெரேரா இதனைத் தெரிவித்தார்.

வன்செயல்கள் காரணமாகத் தென் இலங்கையில் பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன

அதற்கு முன்னர் இடையிடையே மூடப்பட்டும், திறக்கப்பட்டும் வந்தன.

ஜீ சீ ஈ சாதாரணதரப் பததிரப்பரீட்சைஇரண்டு பகுதிகளாக நடத்தப் படும். (உ-எ)

### முச்சந்தி முரளி



உவை பள்ளிக்கூடங்களை மூடி, பாடங்களை நடத்தாம விட்டுட்டு, நைஸா வலு ஈசியான எக்ஸாம் பேப்பரை செட் பண்ணி, எக்ஸாமை ஒப்பேத்தப் பாக்கினம் போலை..... !

### ஆரம்ப ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் பெற
#### தவறியோர் சனியன்றும் பெறலாம்

யாழ்ப்பாணம் அக் 18

ஆரம்ப ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்களை நேற்று பெற்றுக் கொள்ளத்தவறியவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் தகவலை யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

நேற்று ஊர்காவற்துறை,வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 180 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட இருந்தன.

ஆனால் நேற்று குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலை அடுத்து ஊர்காவற்துறைத் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட 65 பேரும் வட்டுக்கோட்டை தொகுதிக்கு நியமனம் பெற்ற 46 பேருமாக மொத்தம் 111 பேர் மட்டுமே நியமனக்

[6ஆம் பக்கம் பார்க்க]

### முதூரில் 4 சிங்களவர் கொலை

கொழும்பு, அக் 18

மூதூர்த் தொகுதியில நீலாப்பளை என்னுமிடத்தில் நான்கு சிங்களவர்கள் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பெருமழையில் சேதமடைந்த அணைக்கட்டு ஒன்றின் திருத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தான் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது

கொலையுண்ட நால்வரில் இருவர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என்றும் மற்றைய இருவரும் இயந்திர இயக்குனர்கள் என்றும் சொல்லப்பட்டது. (உ-ஒ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு

Black & White T. V (National) Size 20'' Cassette National விற்பனைக்குண்டு. தொடர்பு M. அலீம் 41, Park Road, குருநகர். (7223)

பெரியவிளான், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 100 யார் தூரத்தில்பெரியவிளான் அளவெட்டி வீதியில் 10 பரப்பு தோட்டக் காணி குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பெரியவிளான் இ. அற்புதலிங்கத்துடனோ அல்லது கனகசபேசன் நீர்வேலி தெற்கு, நீர்வேலி என்னும் விலாசத்திலோ தொடர்பு கொள்ளவும். (7318)

டீப்பிறீசர் (Deepfreezer) சிறிதுகாலம் பாவித்தது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 118, ஸ்ரான்லி வீதி. (மக்கள் வங்கி முன்பாக) (7303)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நான்கு மாதம் நிரம்பிய நல்ல இன அழகிய பொமினேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.தொடர்பு; துரைராசா தவனேசன், நாவலடி லேன், வண்ணார் பண்ணை (நாச்சிமார் கோயிலடி) யாழ்ப்பாணம் (7224)

### தேவை

பிளேட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும். செட்டியார் அச்சகம்,இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/ 617)

### தவறிவிட்டது

கைலாசபிள்ளை ரவீந்திரநாதன் ஆகிய எனது அடையாள அட்டை 712110180V கஸ்தூரியார் வீதி சுற்றுடலில் 9-10-88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7218)

## வகுப்புகள்

வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், ஹார்மோனியம். கிற்ரர், ஓகன் ஆகிய வகுப்புக்கள் 20-10-88 விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்படும். கண்ணன் இசைப் பயிற்சி நிலையம், 646, K. K. S. Road, நாச்சிமார் கோயிலடி. (7221)

### வினு விடை வகுப்பு

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினு விடை வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

### சங்கீத வகுப்பு (வாய்ப்பாட்டு)

20-10-88 விஜயதசமி அன்று மாலை 4மணிக்கு ஆரம்பிக்கப்படும். ''அம்பிகாஸ்'' 628/2 கே கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (7319)

### மிருதங்க வகுப்புக்கள்

20-10-88 வியாழக்கிழமை விஜயதசமி அன்று மாலை 5.00மணிக்கு ஆரம்பிக்கப்பட இருக்கிறது. விபரங்களுக்கு: கலாலயா, விக்ரோறியா வீதி, (ஹோட்டல் சுபாஸ் அருகாமை) யாழ்ப்பாணம். (7225)

### தொழில் கல்வி

வெளிநாடுகளில் பிரபல்யமான தொழில் கல்வி ஆரம்பம் 20 - 10 - 88 "Radio Amatures" (Morce Operators) (Ship) (P. M. G) ★ Telex & I. D. D Operators(Interntaional இருபாலரும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும் Electronics Engineer Keen Centre, Thirunelvely, (6890)

## கல்வி

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினுத்தாள்களும் விடைகளும் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட ''பிரதீப் மூவிஸ்'', புது வீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (சுணில்). (6980)

### தீபாவளி வாழ்த்து மடல்கள்

பலவகை டிசைன்களிலுள்ள எல்லாவகை தீபாவளிவாழ்த்து மடல்கள்விற்பனையாகின்றன. வியாபாரிகள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். இம்முறை அனைத்தும் புதிய டிசைன்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ்நிலையம், மற்றும் எமது களஞ்சியம் மின்சார நிலைய வீதியிலும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை,யாழ்ப்பாணம். (7205)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஐவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

### தாரா, கோழிக்குஞ்சுகள்

ஒருநாள் கைலேன் வெள்ளை, கறுப்பு கைசெக்ஸ் பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும், கைபுறோ செற்ருபாம் இன்டியன்றிவர் புறயிலர் குஞ்சுகளும், கறுப்பு செற்ருபாம் சேவல்குஞ்சுகளும், காக்கிகம்பிள், வேலோவி இன தாராக் குஞ்சுகளும் 01-11-88ல் விநியோகிக்கப்படும். கால்நடை வளர்ப்போர் சங்கம், சுன்னுகம் கிளை (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்) காங்கேசன் துறை வீதி, சுன்னுகம். (7017)

### கோழிக்குஞ்சு விநியோகம்

18-10-88இல் நல்ல இன கிறிஸ்டோபர்ஸ் புறெயிலர்க் குஞ்சு விநியோகிக்கப்பட உள்ளது. 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு 16/- மட்டுமே. A. J. சுப்பிரமணியம், No 45,கொழும்புத்துறை வீதி, (சந்தனமாதா கோயிலுக்கு அருகாமையில்) சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், லீலாபதி, கண்டிவீதி, மிருசுவில். (7234)

# ஹரன் வெண்திரையில்

வெற்றிகரமாகக் காட்சியளிக்கின்றது
வெள்ளிவிழாச் சித்திரம்
தினசரி 10.30 2.30 மணிக்கு
கமலஹாசன் (இருவேடங்களில்)
சத்தியராஜ், சுஜாதா,
நளினிகாந்த், மனோரமா
மற்றும் பலர் நடித்த

## மங்கம்மா சபதம்

(ஈஸ்மன் கலர்)
மங்கம்மா பிறந்த மண்ணிலே மற்றுமோர் 'நவீன மங்கம்மா' விறுவிறுப்பூட்டும் சித்திரம். (7279)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் வாணிகாந்

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த விஜயகாந்தன் திரிபுரவாணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் வாணிகாந் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்ருர். இவரை அப்பா, மம்மி, அக்கா, தாத்தா, அம்மம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், மாமா, Dr. அத்தை ஆகியோர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர். (7277)

# தேவை

தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரிந்த தட்டெழுத்தாளர் (பெண்) தேவை. தகுதியுள்ளவர் சான்றிதழுடன் நேரில் வரவும்.

NIRU TUITION CENTRE
KONDAVIL

(C/625)

# முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 16 10 1966

உதிர்வு: 30-09 1987

அமரர்
## செல்வராணி (லலி) பெருமாள்

திதி: 18-10-1988

ஆண்டொன்று உருண்டாலும்
உன்நினைவு அகலவில்லை
உன் இளைய வதனம்
என்றும் எம்முடனிருக்கும்
வஞ்சகனின் வலையில் வீழ்ந்து
அகால மரணமெய்திய உன்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

உன் பிரிவால் துயருறும்,
தந்தையார், தாயார்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனிகள், மைத்துனர்,
மருமக்கள், பெருமக்கள்,
உற்ருர், உறவினர்கள்.

பழைய ரோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (7316)

புலோலி ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்ட)

# பதவி வெற்றிடம்

## மருந்தாளர் பதவி

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுல் நிருவகிக்கப்பட்டு வரும் மருந்துச்சாலைக்கு மருந்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 1988 - 10 - 31 ஆம்திகதிக்கு முன்னதாகத் தலைவர், புலோலி பல நோ. கூ. சங்கம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற விலாசத்திற்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

**தகைமைகள்:**

க. பொ. த. சாதாரணதரம் - இரண்டு திறமைச் சித்திகளும், இரசாயனவியலும், ஆங்கிலமும் உட்பட ஐந்து (05) சித்திகள், அத்துடன் மருத்துவக் கல்லூரியினுல் நடாத்தப்பட்ட மருந்தாளர் பரீட்சையில் சித்தி. ஒரு அரசாங்க வைத்தியசாலையில் ஒருவருட கால அனுபவம்

**சம்பளம்:**

855 - 1385
30 x 7 - 40x8


வயதெல்லை: 21-50

பிணை
உரொக்கம் - ரூ. 3000/-
ஆதனம் - ரூ. 5000/-

-தலைவர்.

புலோலி பல நோ. கூ. சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
1988 / 10 / 14. (C/622)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## லெப்டினன்ட் பாலேந்திரன்

(மாமா - பாலய்யா)

ஈழமண்ணில்:- 01-5-1969
ஈழவர் இதயத்தில்:- 21-07-1988

வல்வையின் தவப்பிறப்பு
தியாகத்தின் தனிச்சின்னம்
எரிமலையாய்க் கிளர்ந்தெழுந்து
இனங்காக்க மொழிகாக்க
வல்வை மண் காத்து நின்ருன்,
தெருவெல்லாம் அவன் நாமம்
வேங்கை யென்ருல் மாமா என்பர்
காரை நகரில் நின் உயிரை
மாய்த்துக் கொண்டாய் எம்மை விட்டு
நீ தனியே சென்று விட்டாய்
புலம்புகிறோம் அன்னை உடன்
சகோதரர்கள் சுற்றம் சூழ.

உன் பிரிவால் துயருறும்,
தாய், சகோதர,
சகோதரிகள்,
குடும்பத்தினர்.

காட்டுப்புலம்,
தொண்டமானுறு. (7320)

# ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்கான

# ★ போட்டிப்பரீட்சை ★

## ஒரு மாத துரித பயிற்சி வகுப்புக்கள்

"யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்கள் இணைந்த சேவை"

✶ திரு. T. N. பஞ்சாட்சரம் ✶ திரு. S. மூர்த்தி
✶ திரு. K. சபாநாயகம்

பாடநெறி:
1. Comprehension
2. Knowledge of Language
3. Integrated Skills
4. Writing Skills

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
2 ஆவது பிரிவு

**ஆரம்பம்: 19 - 10 - 88** பிற்பகல் 1-00 மணி

- இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- பரீட்சைக்குரிய வினு - விடைப் பயிற்சிகள்

வகுப்புக்கள்:- திங்கள், புதன்
பிற்பகல் 1-00 மணிமுதல் 4-00 மணி வரை

நடைபெறும் இடம்:- அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் (கிளை)
101/10 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கட்டணம்: ரூபா 150. 00


குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1, Hospital Road, - JAFFNA.
(A.S சங்கரப்பிள்ளைக் கட்டிடம் 1ஆம் மாடி) (C-623)

# இறைவனில் இணைந்த ஓராண்டு





உயர்திரு
**தீயோமார்சலின்**
தோற்றம்: 01—09—1926

திரு. சுவாம்பிள்ளை
**தீயோக்கிளேஸ்**
தோற்றம்: 10—11—1950

மறைவு: 18— 10— 1987

ஆண்டொன்று மறைந்ததையா! உங்கள் இருவரின் அன்புருவம் மறையவில்லை. உங்கள் நினைவில்லா நாளில்லை. எம்துயர் ஆறுதையா!

எங்கள் எல்லோர் வாழ்விலும் ஒளி விளக்காகத் திகழ்ந்த அன்புத் தெய்வங்களே! நீங்கள் எங்களை விட்டு மறைந்து ஓராண்டானுலும் என்றும் எங்கள் நினைவை விட்டகலா உங்கள் நினைவுகள்.

நீவிர் ஆண்டவனில் அமைதி பெற்று வான் வீட்டில் வாழ்ந்து எங்களுக்காய் நிதம் வேண்டுமையா!

சகோதரிகள், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், நண்பர்கள், உற்ருர், உறவினர்கள்.

மனைவி, பிள்ளைகள், உற்ருர், உறவினர்கள்.

குடும்ப உறுப்பினர்கள்.


''சீவியத்தில் எங்களை நேசித்தவர்களே
மரணத்திலும் எங்களை மறவாதீர்கள்''

(7278)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் அளிப்பு அநியாய அழிப்பு

13 ★ 09 ★ 1929



18 ★ 10 ★ 1987

## தம்பிஐயா செல்வரட்ணம்

(இளைப்பாறிய பிஸ்கால்)

அன்போடு அறமும்
பண்போடு பாசமும்
என்போடு தோலும் போல்
இணைந்த எம் குலவிளக்கே!
இன்ருேடு உமை இழந்து
ஆண்டு ஒன்ருச்சோ!!

உங்கள் பிரிவால் வாடும்
உறவினர்கள்

கல்வளை,
சண்டிலிப்பாய். (7222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் திறந்த பல்கலைக்கழக ஆய்வு கூடத்தை
# மாணவர் பயன்படுத்த முடியாதநிலை

### 5 வருடங்கள் ஆகியும் உபகரணங்களைப் பொருத்தும் தளபாடங்கள் வந்து சேரவில்லையாம்

பருத்தித்துறை, அக். 18

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் 1983 ஆம் ஆண்டு ஏழு இலட்சம் ரூபா செலவில் ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்பட்டும் கொழும்பிலிருந்து ஆய்வு கூட உபகரணங்கள் கொண்டு வரப்பட்டும் இந்த ஆய்வு கூடத்தை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. இந்த ஆய்வு கூடத்தை மாணவர்கள் பாவிக்கக் கூடிய முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும்.

வட-இலங்கைப் பண்பாட்டுக் கழக செயலாளர் திரு. ஏ. என.எஸ். திருச்செல்வம் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜயசேகராவிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வட இலங்கைப் பண்பாட்டுக் கழகச் செயலாளரால் இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு பூட்டி வைக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்தையும், தருவிக்கப்பட்டு பாவனையின்றி வைக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்களையும் பயன்படுத்த முடியாததுக்குக் காரணம் ஆய்வு கூடத்தில் இந்த உபகரணங்களைப் பொருத்துவதற்கான தளபாடங்கள் வந்து சேராததே ஆகும்.

இதற்கான தளபாடங்கள் மட்டும் வந்து சேர்ந்துவிட்டால் மாணவர்கள் செய்முறைப் பயிற்சிகளை இந்த ஆய்வு கூடத்தில் மேற்கொள்ள முடியும்.

தற்பொழுது இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் விஞ்ஞான பட்டமாணி தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சிகளை மேற் கொள்ளும் மாணவர்கள் கொழும்பில் உள்ள இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்திற்குச் செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு யாழ். பிராந்திய நிலைய விஞ்ஞான ஆய்வு கூடத்தில் விஞ்ஞான உபகரணங்களைப் பொருத்துவதற்கான தளபாடங்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் மேற்கொள்ளவேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(இ-118)

## அறிவுப் பசிக்கு கல்வி
### நூலகத் திறப்பு விழாவில் உரை

அறிவுப் பசிக்கு கல்வி என்கிற உணவைத் தாராளமாக எடுத்துக் கொள்பவன் வயிற்றுப் பசியை நீக்கிவிடக்கூடிய வளம் நிறைந்தவனாகி விடுகிறான்.

நாட்டின் முதன்மைக்கு அறிவாலயங்களே சான்றாகும்.

நெடுந்தீவு மக்களும் மாணவர்களும் இந்த நூலகத்தை நல்லமுறை பயன்படுத்த வேண்டும்.

நெடுந்தீவு பிரசைகள் குழுத் தலைவர் திரு ம. சபைதப்பிள்ளை நெடுந்தீவு பொது நூலகத் திறப்புவிழாவில் பேசும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த உதவி அரசாங்க அதிபரும் விசேட ஆணையாளருமான திரு. தா. சந்திர சகரம் தமது உரையில், சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் நூலகங்கள் முக்கிய பங்குவகிப்பதாகக் கூறினார்.

நெடுந்தீவு பிரசைகள் குழுச் செயலாளர் புலவர் ஏ டபிள்யூ அரியநாயகம் பல. நோ. கூ. சங்கத் தலைவர் நா. இராமச்சந்திரன் ஆகியோர் மங்கலவிளக்கேற்ற புதிய கட்டடத்தை முன்னாள் விசேட ஆணையாளர் திரு. இரா. சின்னத்தம்பி திறந்து வைத்தார். (ச-111)

## கஷ்டப்படும் கல்லூரியாக கருதி உதவி வழங்குவேன்
### ஆங்கில தினவிழாவில் கல்விப் பணிப்பாளர்

குருநகர், அக். 18

இந்தக் கல்லூரியைக் கஷ்டப் பிரதேசக் கல்லூரியாகக் கருதி உதவி வழங்குமாறு அதிபர் தமது உரையில் கேட்டுக் கொண்டார். கஷ்டப் பிரதேசக் கல்லூரியாகக் கருதமாட்டேன; கஷ்டப்படுகின்ற கல்லூரியாகத்தான் கருதுவேன்.

யாழ்-குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய ஆங்கில தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவம் கல்லூரி அதிபர் திரு. அ ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெற்றது.

வைபவம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பணிப்பாளர் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நூல் நிலையத்தைச் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

மங்கள விளக்கை கல்விப்பணிப்பாளருடன் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. பிதா பி. எம். இம்மானுவேல் அடிகளார், வைத்திய கலாநிதி ஜே. பி கபிலிட்ஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து பேசுகையில் கல்விப்பணிப்பாளர் தெரிவித்ததாவது:

இக்கல்லூரிக்கு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர், விளையாட்டுக் கல்விப் போதனாசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

வடடுக்கோட்டைப் பகுதியில் பணியாற்றும் ஒரு விளையாட்டுப் போதனாசிரியரை இக்கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்துள்ளேன்.

இப்பகுதி விளையாட்டுத்துறையில் முக்கிய கவனம் செலுத்திவருவதை நீண்டகாலமாக அவதானித்து வந்துள்ளதாலேயே அத்துறையில் மாணவர்களை வளர்த்தெடுக்க இந்த நியமனம் பெரிதும் உதவும்.

ஆரம்பக் கல்வி புகட்டும் ஆசிரியர் நியமனமும் எமது கவனத்தில் இருந்து வருகிறது.

நூலகம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்கள் ஒரு சிலர் நூலகத்திற்கு நூல்களை வழங்கியுள்ளனர். அதுபோன்று ஏனையவர்களும் நூலகத்தைக் கட்டியெழுப்ப உதவ முன்வரவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. அ ஸ்ரானிஸ்லோஸ் தலைமையுரையில்:

''எமது பாடசாலை மாணவர்கள் மிகவும் கெட்டித்தன மானவர்களாக விளங்குவதை நடைபெற்ற ஆங்கில தினவிழா நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன. அவர்களது வளர்ச்சியை சூழல் மட்டுப்படுத்திக் கொண்டிருப்பதைக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றும் நான்கு வருடங்களிலும் என்னால் அனுமானிக்க முடிகிறது என்றார்.

யாழ்ப்பாண வட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன். புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. பிதா பி. எம். இம்மானுவேல் அடிகளாரும் உரை நிகழ்த்தினர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விப் பணிப்பாளர் சான்றிதழ்கள் வழங்கினார்.

(இ-51)

## றெட்பானா உடுபுடைவை வழங்கியது

பூஸா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட அனைவருக்கும் முல்லைத்தீவு மாவட்ட றெட்பானா ஸ்தாபனம் 15 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் குழுக் காரியாலயத்தில் வைத்து உடுபுடைவைகளை வழங்கியது.

மேலும் மிகுதி நிவாரணப் பொருட்களை நவம்பர் முதலாம் திகதி வழங்குவதாக றெட்பானா உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-92)

## மீண்டும் கைதானார்!

மட்டக்களப்பு அக் 18

மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளன செயலாளர் சட்டத்தரணி பொன். வேணுதாஸ் படையினரால் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

(இ-21)

## மருத்துவக் கல்லூரியும் மூடப்பட்டது

கொழும்பு அக் 18

வடகொழும்பு மருத்துவக்கல்லூரி கடந்தவெள்ளிக்கிழமை மூடப்பட்டது.

காலவரையறையின்றி இக்கல்லூரி மூடப்பட்டிருப்பதாகக் கல்லூரி செனட் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் தற்சமயம் நிலவும் பதற்றநிலை, கல்லூரி வளவில் அண்மையில குண்டு வீசப்பட்ட சம்பவம் ஆகியன காரணமாகவே கல்லூரியைமூட முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## புனர்வாழ்வு திட்டம

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ். முஸ்லிம் பகுதிகளில், சர்வோதய இயக்கம் புனர்வாழ்வு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

குறிப்பாக வன்செயல்களினாலும், இனமோதல்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் இங்கு புனர்வாழ்வு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(இ-14)


டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


## யாழ். லியோ கழகம் சேவையை விஸ்தரிக்கிறது

யாழ்ப்பாணம், அக் 18

யாழ். லியோ கழகம் தனது சேவையை விஸ்தரிக்க உத்தேசித்துள்ளது.

இதற்கமைய மேற்படி சங்கத்துக்கு அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் சேவை மனப்பான்மை உடையவர்களாகவும் 26 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தலைவர் லியோ எஸ் இளங்கீரன் தெரிவித்தார். (இ-9)

## மாட்டுவண்டிப் போட்டி முடிவு

மானிப்பாய், அக். 18

சங்குவேலி சனசமூக நிலையத்தினர் கருகம்பனையிலுள்ள மைதானத்தில் நடத்திய மாட்டு வண்டிச் சவாரி போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்:

'ஏ' பிரிவு:- 1. திரு. இளையதம்பி (கரவெட்டி) 2. திரு. பிள்ளையார் (சங்குவேலி), 3 திரு சுப்ரமணியம் (பட்டுவல்), 4. திரு. இராமநாதன் சில்லாலை).

'பி' பிரிவு:- 1 திரு. கணேசலிங்கம் (அளவெட்டி), 2. திரு பகீரதன் (பயிலிட்டி), 3 திரு. விக்னேஸ்வரன் (முளாளை) 4. திரு. பிறேம்குமார் (அளவெட்டி).

'சி' பிரிவு:- 1. திரு. சற்குணம் (அளவெட்டி), 2 திரு. இராசன் (வட்டுக்கோட்டை), 3. திரு. ... (அளவெட்டி), 4. திரு. ... (இளவாலை).

இவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் சங்குவேலி சனசமூக நிலைய முன்றலில் வைத்து திரு ஜோசேப் பத்திநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.

(இ 90)

## மீனவர்களுக்கு அடையாளக் கார்ட்

தலைமன்னார் அக் 18

தலைமன்னார் பியர் கடற்றொழில் மீனவர்களுக்கு மீனவ அடையாளக் கார்ட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் பியர் கடற்றொழில் சமூக அபிவிருத்தி கிராமிய அமைப்பின் அனுசரணையுடன் இந்திய அமைதி காக்கும் படை அடையாள கார்ட்டுகளை வழங்கியது. (இ)


J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்**

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கிறேன்.

● முக்கிய குறிப்பு
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:

**S.P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 618)



**IMMEDIATE VACANCIES**

IN SAUDI ARABIA

| | | |
|---|---|---|
| (1) | Mechanical Engineer<br>இயந்திரப் பொறியியலாளர் | — Negotiable |
| (2) | Electrical Supervisor<br>மின்சார மேற்பார்வையாளர் | — Negotiable |
| (3) | Mechanical Supervisor<br>இயந்திரவியல் மேற்பார்வையாளர் | — Negotiable |
| (4) | Plumber<br>குழாய் பொருத்துனர் | — Negotiable |
| (5) | Boiler Technician | — Negotiable |
| (6) | Maintenance Cleaners<br>பராமரிப்பு சுத்திகரிப்பாளர் | — 450 S. R. |
| (7) | University Cleaners<br>கலாசாலை சுத்திகரிப்பாளர் | — 456 S. R. |
| (8) | Hospital Cleaners<br>ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் | — 400 S. R. |
| (9) | Hospital Lady Cleaners<br>ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்<br>(பெண்கள்) வயது 30 - 42 | — 456 S. R. |
| (10) | Catering Lady Waiters<br>வயது 30 — 42 | — 650 S. R. |

**SAUDI OPERATION & MAINTENANCE CO. LTD.**

**T. V. TRAVELS & TOURIST**
(Railway Station front)
Brown Road,
KOKUVIL.

(C 611)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்ரனி தர்பசூரியன்

| ஈழ மண்ணில்: | ஈழவர் மனதில்: |
|---|---|
| 18 - 10 - 1966 | 18 - 10 - 1987 |

மறைந்தாலும் ஒளி வீசும் சூரியே
பகைவருக்கு கனவானாய்
பாசத்திற்கு அடிமையானாய்
உன் உடலை அழித்தாலும்
உன ஆத்மா என்றும் அழியாது
தரணியிலே நீ பிறந்த பயனை
தமிழுக்கு உயிர் விட்டு நிறைவேற்றிக்
கொண்டாய்
உன் கனவுகள் நனவாகும் - அப்போது
உன் ஆத்மா சாந்தியடையும்
உன் பிரிவைத் தாங்கமுடியவில்லையே
சூரியா,
தமிழ் அன்னை பெற்றெடுத்த - செல்வமே
உன் ஓராண்டு நினைவிலும் நீ எம்மோடு
இருப்பதை உணர்கிறோம்

உன் பிரிவால் வாடும்;
தந்தை, தாய், அண்ணர், தங்கைமார்,
மாமா, மாமி, மைத்துனர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

143/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (7043)

## சிரமதானம்

கொடிகாமம் அக் 18 மந்துவில் புளியடி கந்தசுவாமி கோவிலுக்குச் செல்லும் பிரதான வீதி ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. க. நமசிவாயம் தலைமையில் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சரோஜினிதேவி இராசரட்ணம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 28 - 5 - 1947 | 30 - 9 - 1987 |

உயிர் உள்ளவரை எங்களை நேசித்தீர்களே அம்மா! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகல மாட்டாது. அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
தாய், கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், டயலன் காந்தன்,
ராஜ செழியன், டயலினி, சுதர்சினி.

155, திருநெல்வேலி.
(7253)

# 14, 500 மீனவ குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சங்க உதவி

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 14, 500 மீனவக் குடும்பங்களுக்கு யாழ்- செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருள்களை வழங்கியது.

கடல்வலயச் சட்டத்தால் இரவுநேர மீன்பிடி தடை விதிக்கப்பட்டதால் கஷ்டமுறும் மீனவக் குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2,393 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3,160 குடும்பங்களுக்கும், யாழ்நகர உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2,800 குடும்பங்களுக்கும் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1,670 குடும்பங்களுக்கும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 153 குடும்பங்களுக்கும்; மல்லாகதீவு- நெடுங்கேணிப் பிரிவில் 230 குடும்பங்களுக்கும் வலி- வடக்கில் 500 குடும்பங்களுக்கும், அராலி மேற்குப்பிரிவில் 1,490 குடும்பங்களுக்கும், சாவற்காடு மீனவர் சங்கப்பிரிவில் 446 குடும்பங்களுக்கும்,

கொழும்புத்துறை மீனவர் சங்கப் பிரிவில் 118 குடும்பங்களுக்கும், பாஷையூர் சென். அந்தனிஸ் மீனவ சங்கப் பிரிவில் 810 குடும்பங்களுக்கும், சென். ஜோசேப் மீனவ சங்கப் பிரிவில் 115 குடும்பங்களுக்கும், கொக்குவில் மேற்குப் பிரிவில் 245 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி பிரசைகள் குழுப்பிரிவில் 76 குடும்பங்களுக்கும், தீவுப்பகுதி பருத்தியடைப்பு மீனவ சங்கப் பிரிவில் 273 குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

## "பாடசாலைகள் தோறும் கையெழுத்துப் பத்திரிகை வெளிவர வேண்டும்"

பருத்தித்துறை அக் 18 மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்க ஒவ்வொரு பாடசாலையிலும், ஒரு கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட வேண்டும்

புலோலிக் கொத்தணி அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன் வேலாயுதம் மகா வித்தியாலய இலக்கிய மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; மாணவர்கள் இலக்கிய மன்றத்தைப் பயன்படுத்தி தமது பேச்சாற்றலையும் தலைமைத்துவத்தையும் வளர்த்துக் கொள்வதுடன் இலக்கிய இனிமைகளையும் நுகரவேண்டும்''

'இவ் வித்தியாலயத்தின் ஸ்தாபகர் பெயரில் முன்பு ஒரு கையெழுத்துப் பத்திரிகை வெளியானது. நாட்டின் கல்வி மாற்றத்தினால் அப்பத்திரிகை இடைநடுவில் நின்று விட்டது.

''இன்று மீண்டும் புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஒப்படைகளில் வெளிவரும் ஆக்கங்களையும் இணைத்து 'வேலயுதம்' என்ற கையெழுத்துப் பத்திரிகை வெளிவரவிருக்கிறது'' என்றார்.

இலக்கிய மன்றத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.
(இ-113)

### போஷாக்கு ஆய்வு

அம்பாறை அக் 18 அம்பாறை மாவட்டத்தில் போஷாக்குச் சம்பந்தமான ஆய்வு ஒன்று இந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. (இ 14)

### புதிய தலைவர்

மானிப்பாய் அக் 18 யாழ்ப்பாணம்வை எம். சி. ஏ. நிறுவனத்தின்புதிய தலைவராகதிரு.எஸ் சதாசிவனும், செயலாளராக திரு என். தம்பித்துரையும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-90)


## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற நாட வேண்டிய இடம்

**FORTUNA ENTERPRISES**
(Labour Licence No. 79)

பாரின், குவைத், சவூதி
யூ. ஏ. ஈ., சிங்கப்பூர்

வேலை வாய்ப்புகள்

(1) லேபரேர்ஸ்(சம்பளம்ரூ.4500)— 50
(2) டிறைவேர்ஸ் — 05
(3) ஹெவி வெயிக்கிள் டிறைவேர்ஸ் (H.V.Drivers) — 07
(4) வீட்டுப் பணிப்பெண்கள்
(5) மேசன்
(6) காப்பென்டேர்ஸ்
(7) எலெக்ரிஸன்
(8) மெக்கானிக் (Diesel & Petrol)
(9) தோட்ட வேலையாட்கள் (Gardeners)
(10) பெண் தையற்காரர்(Female Tailors)

● பாஸ்போட் செய்து கொடுக்கப்படும்
● பொன்ட் செய்து கொடுக்கப்படும்.

நீங்கள் நாடவேண்டிய முகவரி:

**போடினு என்ரபிரைசஸ்**
யாழ்ப்பாணப் பிரதிநிதி:
இ. விஸ்வேஸ்வரையன்
3ஆம் கட்டைலேன்
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில,
(C-578)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
28
|
08
|
1938



அநியாய அழிப்பு:
18
|
10
|
1987

**ஜெயலதா ஜுவல்லர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்**

எங்கள் குடும்பத்தை ஏற்றமுறச் செய்து குடும்பத்தின் ஒளி விளக்காய் எமக்கு நல்வழிகாட்டி உழைப்பின் சிகரமாய் வாழ்ந்தவரே எம்மை விட்டு நீங்கள் மறைந்து ஓராண்டு காலம் சென்று விட்டாலும் - நீங்கள் காட்டிய அன்பு, அறிவுரை, நற்செயல்கள் எங்கள் மனதிலிருந்து என்றென்றும் அகலமாட்டா.

18 10 87 அன்று கல்குடாவில் இவருடன் அகாலமரணமடைந்த ஸ்தாபன ஊழியர்களாகிய கிருபைராசா, யோகராசா ஆகியோரினதும்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், சுற்றார், உறவினர்கள்,
ஸ்தாபன ஊழியர்கள்.

ஜெயலதா ஜுவல்லர்ஸ்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7307)


★ சவூதிஅரேபியா
★ குவைத்

**பிரயாண ஒழுங்குகள்**

சவூதி அரேபியாவில் உள்ளஒரு பிரபல்யமான சம்பனிக்கும், குவைத்தில் உள்ள தேசிய கிளீனிங் கொம்பனிக்கும் எம்மிடம் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. குறுகிய காலத்துக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் விரும்புவோர் தாமதியாது Pass Port 6 படங்கள் என்பவற்றுடன் நேரில் வரவும். வயது 21 க்கு மேல் (சவூதி)

**சவூதி அரேபியா**

1. கனரக வாகன சாரதிகள்
2. மேசன்
3. தச்சுவேலையாட்கள்
4. பிளம்பர்
5. சுவர்ப் பெயின்ரர்
6. கட்டிட மேற்பார்வையாளர்கள்
7. சுத்திகரிப்பாளர்கள் (Cleaners)
8. தொழிலாளர்கள் (Labourers)

**குவைத்**

வயது 20 க்கு மேல்

1. கிளீனர்ஸ் (30 K.D)
2. சாரதிகள் (கல்ப் f வாகன சாரதி) அனுமதிப்பத்திரங்களுடன்)

மற்றும், கடவுச் சீட்டு இல்லாதவர்க்கு உடன் கடவுச்சீட்டு பெற்றுக் கொடுக்கப்படும்.

**V. N. சிவஞானம்,**
A 449, இராமலிங்கம் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(7313)



**சரியான நிறை தவறாது காட்டும் யூனியன் மேடைத் தராசுகளை சிங்கர் விநியோகிக்கிறது!**



யூனியன், சரியான நிறையைத் தவறாது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன, வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை
அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி.

நீங்கள் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை
விலை: ரூ. 11,215/-

Minds/SA/5

**சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கனில் கொல்லப்பட்ட கெரில்லாக்களில் இருவர் அமெரிக்கர்; இருவர் பாகிஸ்தானியர்

## காபூல் அரசு அறிவிப்பு; அமெ- பாக் அரசுகள் மறுப்பு

காபூல், அக். 17

ஆப்கனிஸ்தானில் அரசுப் படைகளினால் கொல்லப்பட்ட கிளர்ச்சிக்காரர்களில் இருவர் அமெரிக்கர்கள், இருவர் பாகிஸ்தானியர்கள் என்று காபூல் அரசு அறிவித்துள்ளது.

கிழக்கு ஆப்கனிஸ்தானில் கிளர்ச்சிக்காரர்கள் தொடர்ந்து ரொக்கட் தாக்குதலை அரசுப் படைகள் முகாம்கள்மீது மேற்கொண்டு வந்தனர்.

பதில் தாக்குதல் நடவடிக்கையை அரசுப் படைகள் நேற்று முன்தினம் அப்பகுதியில் மேற்கொண்டது.

அப்போது 35 கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களில் இருவர் அமெரிக்கர் என்றும், வேறு இருவர் பாகிஸ்தானியர் என்றும் காபூல் அரசு அறிவித்தது.

முதன் முறையாக, ஜெனிவா சமரச உடன்பாடு கையெழுத்திட்ட பின்னர் அமெரிக்க, பாகிஸ்தான் வீரர்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து போராடியது கண்டு பிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

காபூல் அரசின் குற்றச்சாட்டை அமெரிக்காவும், பாகிஸ்தானும் மறுத்துள்ளன. (எ)

பொய்யாமொழி

**குறள்:**

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்

**பொருள்:**

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 892/2 நாவலர் வீதி, தொலைபேசி 24605
யாழ்ப்பாணம் 22078
18-10-1988 த. பெ. இல. 88

## நாளை ஓர் உரைகல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைத் திறப்பது குறித்து ஆராய்வதற்காக நாளை ஒரு மாநாடு நடக்க இருக்கிறது. பாடசாலைகளின் அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் உட்பட மற்றும் கல்விப் பகுதி அதிகாரிகளை இந்த மாநாட்டுக்கு அழைத்திருக்கிறார் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்.

தெற்கு, மேற்கு, மத்திய மாகாணங்களில் நடக்கும் மாணவர் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள சகல பாடசாலைகளையும் இம்மாதம் 24 ஆம் திகதிவரை மூடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

அதனால் மாணவர் கிளர்ச்சி எதுவும் நடைபெறாத வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளும் மூடப்பட்டு உள்ளன. தெற்கு நிலைமையை நோக்கினால் இன்னும் பல வாரங்களுக்குப் பாடசாலைகள் மூடப்படுமோ என்ற அச்சமே ஏற்படுகிறது.

இது மூன்றும் தவணைக் காலம். வகுப்பேற்றப் பரீட்சைகளும், அனுமதிப் பரீட்சைகளும் நடக்கும் காலம். ஒரு நாள் பாடசாலை மூடப்பட்டாலும் மாணவர் கல்வி பெரிய அளவில் பாதிக்கப்படும் என்பதை நீட்டி முழக்கி விளக்க வேண்டியதில்லை.

கடந்த வருடமும் தமிழ்ப் பகுதிப் பாடசாலைகள் இதே காலத்தில் இருந்து தொடர்ச்சியாக மூன்று நான்கு மாதங்கள் மூடப்பட்டிருந்தன. அதனால் தமிழ் மாணவர் கல்வி பாரதூரமான அளவுக்குப் பாதிப்புற்றது. அவர்கள் ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்ற முடியாமல், பல இழுபறிகளின் பின்னர் இவ்வருடம் ஜூலையில் நடந்த விசேட பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதாயிற்று அந்தப் பரீட்சை முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை. அதனால் ஆயிரக்கணக்கான மாணவரின் கல்வி, ஒரு வருடம் பின்தள்ளப்பட்டு விட்டது,

தமிழ்ப் பகுதியும், அப்பகுதி மாணவரும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தமது பகுதி மாணவரின் கல்வி சிறிதும் இடைவெளி இல்லாமல் தொடர்ச்சியாகப் போதிக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தது தென்னிலங்கை அரசு. இங்கு மாதக் கணக்கில் மாணவர் கல்வி பாதிக்கப்பட்ட போதிலும், அங்கு ஒரு நாளைக்குத் தானும் பாடசாலைகளை மூட வேண்டும் என்று அரசு எண்ணியதில்லை. நியாய சிந்தையுள்ள எவரும் அப்படி நினைக்க, எதிர்பார்க்க நியாயமில்லை என்பதே உண்மை. தமிழ்ப் பகுதி மாணவர் கல்வி பாதிப்புறுவதை அரசோ அமைச்சோ உணர்ந்ததாகவும் இல்லை

இப்போது தெற்கில் பாடசாலைகளை மூடுவது என்றால் தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளையும் மூடிவிட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு வருவது எந்த விதத்திலும் நியாயமாக இல்லை தமிழர்கள், தமிழ்ப் பகுதி விவகாரங்கள் என்றால் கேட்பார் எவருமில்லை என்ற நிலையில், கேட்டுக் கேள்வி இன்றி கொழும்பில் உள்ள அமைச்சர்களும் அதிகாரிகளும் தாம் நினைத்த மாதிரி நடந்து கொள்கிறார்கள். தமிழர்கள், தமிழ்ப்பகுதி விவகாரங்கள் 'எடுப்பார் கைப் பிள்ளைகள்' என அவர்கள நினைத்து விட்டார்கள்! சிங்கள மக்களுக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு இன்னொரு நீதி என்ற 'அடிப்படைத் தத்துவம்' கனகச்சிதமாக அமுலாக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான நீதி தவறிய செயல்களைத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள அதிகாரிகள் எதிர்த்து நிற்கவேண்டிய, எடுத்துச் சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. கொழும்பு அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு எல்லாம் கோயில் மாடுகள் போல தலையாட்டும் நிலை இல்லாமல் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை, உரிமை மீறல்களை தம்மால் அமுல் நடத்த முடியாது என்று பகிஷ்கரிக்கும் அளவுக்காவது அவர்கள் முன்னுக்கு வர வேண்டும்.

நாம் உண்டு; எமக்குச் சம்பளம் உண்டு என்று தமிழ் அதிகாரிகள் தொடர்ந்து நடந்து கொண்டால், கொழும்பில் உள்ள அமைச்சர்களும், அதிகாரிகளும், மேலும் மேலும் ''குதிரை விடுவார்கள்!''

அதன் விளைவு என்னவாகும்? குட்டக் குட்டக் குனிந்தால் ...... மேலும் மேலும் குட்டுவார்கள் அல்லவா?

நாளைய மாநாடு தமிழ்ப் பகுதி அதிகாரிகளின் துணிவுக்கு ஓர் உரை கல்லாக அமையட்டும், ஒரு விடயத்திலாவது தங்கள் ஒற்றுமையைக் காட்டினால் அதன் பின் கொழும்பு அதிகாரிகள் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க மாட்டார்களா ...? என்ன ......??

தமிழ் நாட்டில்

## பலம் பொருந்திய கட்சி இந்திரா காங்கிரஸே!

### மூப்பனார் பெருமிதம்

சென்னை, அக். 17

தமிழ் நாட்டில் பிராந்தியக் கட்சியுடன் இந்திரா காங்கிரஸ் தேடிப்போய் கூட்டு வைத்த காலம் மலையேறி விட்டது.

இப்போது ஏனைய கட்சிகள் தான் தேடி வந்து இந்திரா காங்கிரஸுடன் கூட்டு வைக்க முயற்சிக்கின்றன.

இப்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி. கே மூப்பனார் தெரிவித்தார்

இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் கூட்டு வைக்கப்போவதாக முஸ்லிம் லீக் தமிழ் நாடுத் தலைவர் அப்துல் ஸமது தெரிவித்தது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே திரு. மூப்பனார் இதனைத் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகள் கூட்டு வைக்க முன்வருவதில் இருந்து தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் பலம் பொருந்தி வருகிறது என்பது தெரிகிறது அல்லவா.

இன்று நாட்டின் 'பெரிய' தலைவர் ராஜீவ் காந்தியே. ஏனையோர் குட்டித் தலைவர்கள் தான்.

இப்படி திரு. மூப்பனார் சொன்னார். (எ)

வெளி உலகில்

## விமான விபத்தில் 43பேர் பலி!

ரோம் அக் 17

ரோம் விமான நிலையத்தில் இன்று அதிகாலை நடந்த விமானவிபத்து ஒன்றில் 43பேர் உயிரிழந்தனர்.

உகண்டா விமான சேவைக்குச் சொந்த மானவிமானமே விமான நிலையத்தில்உள்ள கட்டடம் ஒன்றில் மோதி இரண்டாகப் பிளந்து வெடித்தது.

இந்த விமானம் என்டபேயில் இருந்து லண்டன் செல்லும் வழியில் இந்த விபத்து இடம்பெற்றது. (எ)

## சுதந்திர காஷ்மீர் நாடு அமைக்கும் முயற்சி முறியடிப்பு

### பொலிஸ்மா அதிபர் தகவல்

ஸ்ரீநகர் அக் 17

பாகிஸ்தான், இந்தியா ஆகியநாடுகளில் இருந்து பிரிந்து சுதந்திர காஷ்மீர் நாடு ஒன்றை உருவாக்கும் முயற்சி ஒன்றை முறியடித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

காஷ்மீர் மாநில பொலீஸ்மா அதிபர் குலாம் கிலானிபண்டிட் இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலத்தில் பஞ்சாப் பாணியிலான வன்செயல்களைத் தூண்டி விட காஷ்மீர் இளைஞர்கள் சிலருக்கு பாகிஸ்தான் ஆயுதப்பயிற்சி அளித்து வருவது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து,இத்தகவலை அவர் வெளியிட்டார்.

காஷ்மீர் தீவிரவாத இளைஞர்களுக்கு பாகிஸ்தானில் வைத்தே ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஆயுதப்பயிற்சி பெற 100க்கு அதிகமானோர் எல்லை ஊடாக காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் சென்றுள்ளனர் என்று பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார். (எ)

## ஸியாவின் மரணத்திற்கு சதிச் செயலே காரணம்

### விசாரணை அறிக்கை வெளியானது

இஸ்லாமபாத், அக் 17

அதிபர் ஸியா—உல்—ஹக் பயணம் செய்த விமானம் சதிச்செயல் காரணமாகத்தான் விபத்துக்குள்ளானது என்று பாகிஸ்தான் அரசுக்குழு தெரிவித்து இருக்கிறது.

குழுவின் 350 பக்க அறிக்கைநேற்று இஸ்லாமபாத்தில் வெளியிடப்பட்டது.

தொழில் நுட்பக் கோளாறு காரணமாகத்தான் இவ்விபத்து ஏற்பட்டது என்பதையும் குழு நிராகரித்திருக்கிறது.

இந்த அறிக்கைநேற்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கையில் கூறப்பட்டதற்கிணங்க மேல் விசாரணை நடத்த விசேட குழு ஒன்று நியமிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது (உ-எ)

## ராஜஸ்தான் எம். எல். ஏ. குடும்பத்தில் பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம்

ஜெய்ப்பூர், அக். 17

நான்கு தலைமுறைகளாக பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொன்று வருவதாகக் கூறப்படும் இந்திரா காங்கிரஸ் எம். எல் ஏ. வான பிரிஜேந்திராசிங்கின் குடும்பத்துக்கு எதிராக ராஜஸ்தான் மாநில சட்டசபையில் பெண் விடுதலை இயக்கத்தலைவர்கள் மறியல் செய்தனர்.

பூர்வாங்க அறிக்கையின் படி இக் குடும்பத்தில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் திட்டமிட்டுக் கொல்லப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது

இந்த மறியலைத் தொடந்து பாரத்பூர் எம்பியான இணை அமைச்சர் நட்வர்சிங் ஜெய்ப்பூருக்கு விஜயம் செய்தார்.

பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் நிலவுவது குறித்து கவலை தெரிவித்த அவர், இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்காமல் தாமதிப்பது குறித்து மாநில அரசைக் கண்டித்தார். (எ)

# நானிலத்தோர் போற்றும் நவராத்திரி விரதம்

### த. சிற்சபேசலிங்கம்

நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு.

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.

அம்பிகையை நோன்பு நோற்று பூஜை செய்து தோத்திரம் செய்து வரம் பெற்றோர் பலர்.

சாவித்திரி, அம்பிகைக்கு மூன்று நாட்கள் நோன்பு நோற்று பூஜை செய்து தன் கணவனது ஆயுளை நீடித்தாள்.

ஸ்ரீ ராமச்சந்திரன் சீதாதேவியைப் பிரிந்திருந்த காலங்களில் வனத்திலே அம்பிகைக்குப் பூஜை செய்தார்.

அர்ச்சுனன் அம்பிகையைப் பூஜித்து விஜய தசமி தினத்தன்று தனது ஆயுதங்களை மரப்பொந்திலிருந்து எடுத்தான்

ஆதிசங்கரர் ஏழையின் வீட்டில் கனகதாரா தோத்திரம் பாடி செல்வம் கொழிக்கச் செய்தார்.

அபிராமி பட்டர் தை அமாவாசைத்தினத்தன்று அம்பிகைக்கு அந்தாதி பாடி சந்திரனை பூரண ஒளிவீசச் செய்தார்.

#### அம்பிகையின் வடிவங்கள்

அம்பிகை பற்பல வடிவங்களில் அடியார்களுக்கு காட்சி கொடுத்தருளுகின்றாள்.

மகாமாரியாகவும் புவனேஸ்வரியாகவும் வராகியாகவும் திரிபுர சுந்தரியாகவும் காளியாகவும் துர்க்கையாகவும் இலக்குமியாகவும் சரஸ்வதியாகவும் காட்சியளிக்கின்றாள்.

அம்பிகையின் அருள் வடிவங்களில் அமைந்த உறுப்புக்களை வாணித்து நாமங்கள் புகட்டப்படுகின்றன.

அம்பிகையின் கூந்தலையிட்டு வண்டார்குழலி, வண்டமர் பூங்குழலி, மலர்க் குழல் நாயகி, ஞானப்பூங்கோதை என இன்னும் பல நாமங்கள் செப்புகின்றன.

#### மூன்றுவகை விரதங்கள்

அம்பிகைக்குரிய விரதங்கள் மூன்று வகைப்படும். முதலாவது சுக்கிரவார விரதம் இவ்விரதம் சித்திரை மாதத்து சுக்கில பட்சத்து முதல் சுக்கிர வாரம் தொடக்கம் ஒவ்வொரு சுக்கிரவாரந்தோறும் அனுஷ்டிக்கும் விரதம்.

இரண்டாவது ஐப்பசி உத்தர விரதம். ஐப்பசி மாதத்து உத்தர நட்சத்திரத்தன்று அனுஷ்டிக்கும் விரதம்.

மூன்றாவது நவராத்திரி விரதம்.

இந்த நவராத்திரி நான்கு வகைப்படும்.

#### நான்கு வகை நவராத்திரி

ஆஷாட நவராத்திரி, மாகநவராத்திரி வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி என்பனவாம்.

இவற்றுள் ஆஷாட நவராத்திரி, மாக நவராத்திரி இரண்டும் தற்சமயம் கொண்டாடப் படுவதில்லை,

வசந்த நவராத்திரி இந்தியாவில் சிற்சில இடங்களில் கொண்டாடப்படுகிறது.

சாரதா நவராத்திரி உலகின் பல பாகங்களில் வாழும் இந்துக்கள் மத்தியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

ஆஷாட நவராத்திரி ஆனி மாதத்திலும் மாக நவராத்திரி தை மாதத்திலும், வசந்த நவராத்திரி பங்குனி மாதத்திலும் நடைபெறுகின்றது

கன்னி மாதமாகிய புரட்டாதியில சூரியன் நிற்கும்பொழுது அமாவாசையை அடுத்து வரும் ஆஸ்விஜமாதம் என்று சொல்லப்படும் ஐப்பசி பிரதமை முதலாக நவமித்திதி முடியும் வரையும் உள்ள ஒன்பது தினங்களாகும்,

இந்த ஒன்பது தினங்களில் முதலெட்டு நாளும் பணிகாரம். பழம் முதலியவை உட்கொண்டு, மகாநவமியில் உபவாசம் இருத்தல் வேண்டும்,

இதுவே நவராத்திரி விரதமாகும்.

இவ்விரத தினங்களில் முதல் மூன்று தினங்களில் வீரம் தரும் துர்க்கையையும், அடுத்து மூன்று தினங்களில் செல்வம் தரும் இலட்சுமியையும் கடைசி மூன்று தினங்களில் கல்விச் செல்வத்தைத் தரும் சரஸ்வதி தேவியையும் முன்பு அரசாட்சிசெய்த அரசர்கள் பூஜித்து நற்பலனைப் பெற்றார்கள் என்று அறியப்படுகின்றது

#### மகிடாசுரனைச் சங்காரம் செய்த நாள்

முன்னொரு காலத்தில் மகிடாசுரன் தான் பெற்ற வெற்றி வரத்தினால் தேவர்களுக்கும் மக்களுக்கும் கொடுந் துன்பம் செய்து வந்தான்.

இத்துன்பங்களைப் பொறுக்க முடியாமல் தேவர்கள்சிவபெருமானிடம் முறையிட்டார்கள்.

அவர் தம் தேவியிடம் நீ சென்று மகிடாசுரனை சங்காரம் செய்துவிட்டு வா எனக் கூறினார்.

தேவியும் அப்படியே சென்று அசுரனுடன் யுத்தம் செய்து கடைசியில் அவன் வன்னிமரமாக நிற்க அம்மரத்தை வெட்டி அவனைச் சங்காரம் செய்த நாளே விஜயதசமியாகும்.

இத்தினத்தில் வன்னி இல்லாவிட்டால் வாழை மரத்தைச் அலங்கரித்து ஞாபகக்குறியாக வெட்டுவார்கள்.

#### விஜயதசமி தின செயற்பாடுகள்

நவராத்திரி விரத காலங்களில் ஆலயங்களில் அம்பிகையை கும்பத்தில் பூஜிப்பார்கள்.

ஸ்ரீசக்கர பூஜை சிறப்பாகச் செய்வார்கள்.

வீடுகளில் பூஜை அறையில் தீபங்கள் விசேஷமாக ஏற்றுவார்கள்.

விதம் விதமான கோலங்கள் போடுவார்கள்

ஒன்பது தினங்களில் ஒன்பது விதமான பட்சணங்கள் நிவேதனம் செய்வார்கள்.

அத்துடன் தாம்பூல பழவர்க்கங்கள் தேன், கற்கண்டு வைப்பார்கள்.

மகாநவமி தினத்தன்று ஆயுதங்கள், வாத்தியங்கள், புத்தகங்கள் முதலியன பூஜையில் வைத்து மறுநாள் விஜயதசமி தினத்தன்று எடுத்து தங்கள் காரியங்களைச் செய்வார்கள்.

விஜயதசமிதினத்தன்று சிறப்பாக ஏடு தொடக்கல், சங்கீத வகுப்பு ஆரம்பம் முதலியன நடைபெறும்.

அம்பிகையைசௌந்தரியலகரி, திரிபுரசுந்தரி ஸ்தோத்திரம், அபிராமி அந்தாதி. சகலகலா வல்லிமாலை, சரஸ்வதி அந்தாதி மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்,கனகதாராஸ்தோத்திரம் முதலியவற்றில் ஒன்றை இந்த ஒன்பது தினங்கள் படித்து, விரதமிருந்து வழிபட்டு உய்வோமாக. (ச)

# நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், அக்18

யாழ் குடாநாடு எங்கும் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. நவராத்திரி விழா பற்றி எமது நிருபர்கள் அனுப்பியுள்ள செய்திகளை வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகிறோம்.

#### குரும்பசிட்டியில்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நாளைமறு தினம் வியாழக்கிழமை பி ப 4 மணிக்கு கலாகேசரி ஆ தம்பித்துரையின் தலைமையில் வாணி விழா கொண்டாடப் படும். (ச-27)

#### நவாலியில்

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை வாணி விழா கொண்டாடப் படும்.

இவ்விழாவில் கல்வி அதிகாரி திரு. கே. மகேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

சைவப் புலவர் எம். எஸ் ஸ்ரீதயாளன் திரு. ப. ஆனந்தமகேஸ்வரன் மானிப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் சிறப்புரை நிகழ்த்துவார்கள். (ச-90)

#### சரசாலையில்

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

விஜயதசமி தினத்தன்று காலை நவராத்திரி கும்பாபிஷேகம் வித்தியாரம்பம் ஆகியவை நடைபெறும்.

அன்று மாலை மானம்பு உற்சவம் நடைபெறும் (ச-31)

#### சாவகச்சேரியில்

சாவகச்சேரியில உள்ள சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோயில், புராதன வாரியப்பர் கோயில் சாவகச்சேரி துர்க்கை அம்பாள் கோயில்களில் நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை கேதார கௌரி விரதம் ஆரம்பமாகவுள்ளது.

ஏராளமான பெண்கள் இக்கோயில்களில் இவ்விரதத்தை அனுஷ்டிக்கவுள்ளனர்.

#### கந்தரோடையில்

கந்தரோடை வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி சமேதவிஸ்வநாதப் பெருமாள் ஆலயத்தில் விஜய தசமி விழா சிறப்பாக இடம்பெறவுள்ளது

அன்று மாலை அம்பாள் திருவீதி உலாச் சென்று கந்தரோடை வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் மகிசாசுரமர்த்தனி (வாழை வெட்டு) வைபவம் இடம் பெறும். (ச-27)

#### உடுவிலில்

உடுவில ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தில் நவராத்திரி பூஜை தினமும் நடைபெற்று வருகிறது

20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு லட்சுமி விருட்சபூஜை நடைபெறும். (ச-9)

#### யாழ்ப்பாணத்தில்

யாழ் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக

[6ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியிணைந் இயதிரங்கள்

ஜோண்சன்

எவன்றூட் (10H.P.)

நிதான விலையில்

25,500/-ற்கு வாங்க

சென். அன்ரனீஸ்

63 யூதாததேயு கோவில் வீதி.

பாஷையூர்.

யாழ்ப்பாணம்.



# உதயன்

18 - 10 - 1988 செவ்வாய்க்கிழமை



வடபகுதி கடற்றொழிலாளர் கவனத்திற்கு!

எம்மிடம்

ஜோண்சன், எவன்றூட்

வெளியிணை இயந்திரங்களையும்,

வலை, நூல், போயா

போன்ற கடற்றொழில் உபகரணங்களையும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சென். அன்ரனீஸ்

40, கடற்கரை வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்.



ALCOHOLICS ANONYMOUS-JAFFNA GROUP

குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு விரும்புகிறீர்களா? இது சம்பந்தமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

சந்திக்கும் நேரங்கள்:

22-10 88 பி.ப. 3 00-பி.ப. 5.00

26-10-88 பி.ப. 3.00 பி.ப. 5,00

''சாந்திசம''

21, முதலாம் குறுக்குத்தெரு,

யாழ்ப்பாணம். (7280)


## ஆஸ்பத்திரிச் சம்பவம்; ஊழியர்கள் கண்டனம்

சூட்டுக் காயத்துக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஒருவரை ஆஸ்பத்திரியில் வைத்து கத்தியால் குத்தி கொலை செய்ய முயன்ற சம்பவத்தை ஆஸ்பத்திரி ஊழியர்கள் கண்டித்துள்ளனர்.

நேற்று வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றில் இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டது

இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஆஸ்பத்திரியில் இடம்பெறுமல் தவிர்க்கும்படி சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக்கொள்வது என ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்றால் ஆஸ்பத்திரி சேவை ஸ்தம்பிதம் அடையும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

(உ-ஓ-10)

## நாளை நடைபெறும் கூட்டம்

யாழ் மாவட்ட பாடசாலைகளை மீண்டும் திறப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காக கல்வி பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் கூட்டியுள்ள விசேட கூட்டம் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும்

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கொத்தணி அதிபர்கள் வட்டாரக்கல்வி அதிகாரிகள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது (உ-9

## நவராத்திரி....

(5 ம் பக்க தொடர்ச்சி)

நிலையத்தில் நவராத்திரி விழா தினமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு வித்தியாரம்பம் நடைபெறும்.

சிவானந்த சிறுவர் சமய பாடசாலை மாணவர்களின் சதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெறும்

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ்மன்றத்தில் விஜயதசமி தினத்தன்று சரஸ்வதி பூஜையும் வாய்ப்பாட்டு வீணை மிருதங்கம் ஆகிய துறைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும். (ச)

## பாக். - மேற்கிந்திய மோதல் இன்று

ஷர்ஜா, அக் 18

ஷர்ஜாவில் நடைபெறும் முத்தரப்பு கிரிக்கெட் மோதலில் இன்று பாகிஸ்தான் அணி மேற்கிந்திய அணியை எதிர்த்து மோதும்.

நாளை நடைபெறும் போட்டியில் பாகிஸ்தான் இந்திய அணிகள் மோதும்.

வெள்ளிக்கிழமை அரையிறுதிப் போட்டியும் சனிக்கிழமையன்று இறுதிப் போட்டியும் நடைபெறும். (உ-எ)

## ரயில் சேவை இன்னும் முடிவு ஏதுமில்லை

யாழ்ப்பாணத்துக்கான வாராந்த ரயில் சேவையை ஆரம்பிப்பது பற்றி இதுவரை முடிவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று ரயில்வே திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாராந்த யாழ் ரயில் சேவை கடந்த வாரம் நிறுத்தப்பட்டது

பாதுகாப்புக் காரணங்களுக்காக அச் சேவை நிறுத்தப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

வடபகுதி ரயில் [illegible] தற்சமயம் வவுனியா வரையுமே நடைபெறுகிறது. (உ-எ)

## ஈழத்தமிழ் மாணவருக்கு தனிப் பரீட்சை

சென்னை அக் 18

தமிழகத்தில் பொறியியல், மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு விணணப்பிக்கும் ஈழத்தமிழ் அகதி மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு என விசேட பரீட்சை ஒன்று நட்ததப்பட உள்ளது.

யாநில அரசே இதற்கான தெரிவுப்பரீட்சையை நடத்தும்.

இந்தப் பரீட்சைகளில் தோற்றவுள்ளோர் தகுந்த அத்தாட்சிகளையும், ஆளடையாள அட்டைகளையும் சமர்ப்பிக்க வேண்டுமெனப்பணிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

## நியமன....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தமக்கென ஒதுக்கப் பட்டதினங்களில் நியமனக் கடிதங்களைப்பெற முடியாதவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் கடிதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## மேலும் 8....

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

உதவிகளைச் செய்து கொடுப்பதில் செஞ்சிலுவைச் சங்கமும், பிரசைகள் குழுக்களும் ஈடுபட்டிருந்தன.

நேற்றுமாலை இரண்டு மணியளவில் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ்மூலமும் செஞ்சிலுவைச் சங்க வாகனம்மூலமும் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

(உ-எ-9-10)


JAFFNA COLLEGE

ANNUAL PRIZE-GIVIN[illegible]

on

Wednesday 19th October, 1988 at 9.30 a. m.

Chief Guest

PROFESSOR

P. Balasundarampillai Ph. D

Head of the Department of Geography, University of Jaffna

and

Mrs. R. Balasundarampillai

Parents, Alumni and Friends are Cordially invited

A. Kadirgamar

Principal

Vaddukoddai,

17-10-1988.

(C!626)



எமது நேற்றைய

புதிய வெளியீடுகள்

(1) சிவாஜி - வடிவுக்கரசி

''என் தமிழ் என் மக்கள்''

(Pyramid Original)

(2) ராஜா - ரஞ்சனி

''நெருப்பு நிலா''

உங்கள்

(3) சத்தியராஜ் - ஊர்வசி

''கடமை எனது உடமை''

(Santh Original)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C/ 627)



★ 19-10-88 அன்று

விற்பனைக்கு வருகின்றது

பாடசாலை முகாமைத்துவம்

ஆக்கியோன்:

ச. சுப்பிரமணியம்

[கல்வி அதிகாரி]

★ அதிபர் தரம் I, II, III,

போட்டிப் பரீட்சைக்கான

சிறந்ததோர் வழிகாட்டி

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

[C/628)



First time in Jaffna

ENGLISH WORKSHOP CLASSES

1. ஆரம்ப அறிவு குறைவானவர்களுக்கும் ஏனையோருக்குமுரியது.
From basic to O/L
(விரிவான கற்கைநெறி 2 மாத காலம்)

2. Useful for Teachers Selection Exam.
(ஒரு மாத கால துரிதப் பயிற்சி)
3 Lectures a week,
Tuesdays, Thursdays, Fridays } 1.30 — 3 30 p m.

3. யாழ்நகரில் அனைத்து வகுப்புகளுக்கும் ஏற்ற முறையில்
English Cassette (Radio) Language Course
Spoken English
(Grammar and Usage)
கூடிய விரிவான கற்கை நெறி:
6 மாத காலம்.

திரு. K. சபாநாயகம்

திரு. இராஜநாதன் நைல்ஸ்

1ஆம் பகுதி 60/

1ஆம், 2ஆம் பகுதிகள்: 100/-

1ஆம், 2ஆம், 3ஆம் பகுதிகள்: 125/

ஆரம்பம்: 20-10-1988

(2.30 p.m.)

மு.கு. ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கு 3 பகுதிகளுக்கும் மொத்தக் கட்டணம் [ஒரு மாதம்] 100/- மட்டுமே!

விவரங்களுக்கு:-

SELIN Institute

Point-Pedro Road,

IRUPALAI,

KOPAY.

(7283)


## கண்ணீர் அஞ்சலி

### திரு. கந்தையா பாக்கியநேசர்

கிளிநொச்சி கமநல சேவை நிலய நீண்டகாலத் தலைவரும், சமாதான நீதவானும், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சார்பில் அவர்கள் தேவைகளுக்கு அயராது உழைத்த திரு. கந்தையா பாக்கியநேசர் அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்துகின்றது.

அன்னாரின் குடும்பத்தவர்க்கும், உற்றூர் உறவினர்க்கும், விவசாயிகளுக்கும் எமது அனுதாபங்கள்.

கிளிநொச்சி—கமநலசேவை நிலய ஊழியர்கள்

(7328) —உறுப்பினர்கள்

## முதல் வருட நினைவு



திரு. ஜோர்ஜ் வில்பிறட் அலெக்சாண்டர்

மண்ணில் பிறப்பு: 1915. 04. 25 விண்ணில் இறப்பு: 1987. 10. 19

கல்லறையில் நீ அமைதி காண்கிறுய்
அமைதிகாண நாம் கல்லறையாகிறேம்

இவரின் ஆத்மாவுக்கு 19-10 88இல் அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.

மனைவி, மக்கள்.

118, [illegible] குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

( 7281 )

# மரண அறிவித்தல்கள்

## செல்வி பாலாம்பிகை கனகசபை

காலஞ்சென்ற கதிர்காமர் கனகசபை (ஜே. பி. யூ. எம் - அரச சட்டத்தரணி) காலஞ்சென்ற செல்லம்மா கனகசபை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி செல்வி பாலாம்பிகை கனகசபை நேற்று மாலை காலமானர். இவர் இராமநாதன் கல்லூரியின் முன்னுள் ஆசிரியையும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னுள் அதிபரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''கனகஸ்தான்'' இல. 125 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்,

தகவல்:

செல்வி யோகாம்பிகை கனகசபை

(7329)

## திரு. கந்தையா பாக்கியநேசர்

(தலைவர், கமநலசேவை, கிளிநொச்சி)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி வாசியுமான திரு. கந்தையா பாக்கியநேசர் 16-10-1988 அன்று காலமானுர். இவர் காலஞ்சென்ற திரு. சாமுவேல் முத்து கந்தையா (பிரதம பாதுகாவலர், புகையிரத திணைக்களம்) திருமதி மாக்கிறேட் தம்பதிகளின் அன்பு மகனும், வேலணை கிழக்கு திரு கணபதிப்பிள்ளை திருமதி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பகவதியின் (பிரதம தாதி அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி) அன்புக் கணவரும், ஜெகந்தினி, சுகந்தினி, ஜெகசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியஜீவா, பாக்கியரஞ்சிதம், காலஞ்சென்ற பாக்கியஜெயம், பாக்கியராஜா (பிரான்ஸ்), புஷ்பதேவி, பாக்கியகுமார், பாக்கியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நீக்கிலப்பிள்ளை, லில்லி, தணிகாசலம், திரேசம்மா, சந்தியோகுதாசன், பத்மா, வேலணையைச் சேர்ந்த பராசக்தி, பரமேஸ்வரி, பத்மாவதி, பரிமளம், பரமகுருநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னுரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 19-10-1988 புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

47, ஈச்சமோட்டைவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்;
பாக்கியறெஜினேல்ட்

(7282)

## சின்னப்பா வேலுப்பிள்ளை

திரு. சின்னப்பா வேலுப்பிள்ளை (Retired Forest Ranger) 17-10-88இல் காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற க. சின்னப்பா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஸ்ரீமதி நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (Field Asst. Anti Malaria Campaign, Kilinochchi), ஸ்ரீரஞ்சன் (Chartered Accountant Zambia), ரஞ்சனதேவி, காஞ்சனதேவி (முன்னுள் ஆசிரியை திருகோணமலை) ஆகியோரின் அன்பு தகப்பனுரும், சிவயோகமலர், ஜெயசித்திரா (Zambia), K. V. பாலசுப்பிரமணியம் (தேசிய தொழிற் பயிற்சிச்சபை, யாழ் மாவட்ட உத்தியோகத்தர்), பிரேம்குமார், (Engineer Oman) ஆகியோரின் அன்பு மாமனுரும், நிஷாகரன், நிரோஷா, திவாகர், பிரவீன் ஆகியோரின் அன்பு பாட்டனுருமாவார். அன்னுரின் ஈமைக்கிரியைகள் 18-10 88 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்:-
வே. ஸ்ரீதரன்

ரத்தின வாசா
கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு.

(7317)

## OBITUARY NOTICE

### Mrs. Selvaranee Rajakulendran

Mrs. Selvaranee Rajaku'enderan, beloved wife of the late J G. Rajakulendran mother of the late Kamalaranee, Dr.F.A. Rajaku!endran, Mr. A. J G. Rajakulendran (U K', Vimala, Pastor R. Rajakulendran and Suvendrini, and mother - in law of the late Stephens, Lilani, Jeyaluxmi, Dr. S Jebanesan and Mr. S. J. C. Kadirkamar passed away. Funeral takes on Wednesday 19 th october at 3. 30 p.m. The remaius will be taken to Colombuthurai Cemetery for enterment.

Mrs. S. J. C. Kadirkamar

31, Shwartz Lane,
Chundiku'i.

(7322)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 18th October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org